1992 செப்டம்பர் 24]

திருமதி ஜீனத் சர்புதீன் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவரவர்களே, சென்னையில் வாழும் குடிசைப் பகுதி மக்கள் ஸ்லம் கிளீயரன்ஸ் போர்டு மூலமாக அடுக்கு மாடிக் கட்டிடங்களை வாங்கி விடுகிறார்கள். அதன் பிறகும் அதன் பக்கத்திலேயே குடிசைகளைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படி அவர்களிடம் சென்று இதை காலி செய்ய வேண்டுமென்று கேட்டாலும் அல்லது ஸ்லம் கிளீயரன்ஸ் போர்டுக்குக் கம்ப்ளெயின்ட் கொடுத்தாலும் சரி, அவர்கள் ஸ்டே வாங்கி விடுகிறார்கள். இப்படியே போய்க் கொண்டிருந்தால் எத்தனை அடுக்கு மாடிக் கட்டிடங்கள் நீங்கள் கட்டினாலும் அந்தக் குடிசைகளை மாற்றி அமைக்க முடியாது. ஆகையினால் இதற்கு ஒரு புதிய சட்டத்தை நாம் கொண்டு வர முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 78, திரு. செ. பெருமாள், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

முற்பகல் 10.35

78—

ஏற்காடு தொகுதியில் தொழிற்கல்விக் கூடம்.

9604— திரு. செ. பெருமாள் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா,

ஏற்காடு தொகுதியில் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ஒரு தொழிற்கல்விக் கூடம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஏற்காடு தொகுதியில் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் தொழிற்கல்விக் கூடம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. செ. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே, ஆயிரம் பேர் கொண்ட கிராமங்களுக்கு ஒரு பேருந்து விடப்படும் என்ற முறையில் **அதிகமானபஸ்கள்** விடப்பட்டிருக்கின்றன. என்னுடைய

தொகுதியிலே மாணவர்கள், நிறைய படித்த இளைஞர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பயன்பெறும் வகையிலே அமைச்சர் அவர்கள் இந்த திட்டத்தை மீண்டும் பரிசீலனை செய்து, அடுத்த ஆண்டிலாவது கொண்டு வர ஏற்பாடு செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. பெருமாள், நீங்கள் இந்தக் கேள்வியைக் கேட்கிற விதம் சரியல்ல. போக்கு வரத்துத் துறை அமைச்சர் அதிகமான பஸ்களை விட்டுக் கொண்டிருக்கிறார்; நீங்கள் இதைச் செய்வீர்களா என்று சொல்வது, அந்த இரண்டு அமைச்சர்களுக்கும் நீங்கள், ஏதோ அவர் செய்கிறார், நீங்கள் செய்யவில்லையா என்று கேட்பதைப் போலாகும். அதிகமான பஸ்கள் விடப்பட்டிருக்கின்றன; எனவே, இந்தத் தொழிற்கூடம் அமைக்கப்படுமா என்று அந்தக் கேள்வி அமைக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் 3 இருக்கிறது. அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் 13 இருக்கின்றன. அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்கல்விக் கூடங்கள் 6 இருக்கின்றன. அந்த மாவட்டத்தில், அங்குள்ள மலைவாழ் மக்களுக்கான பெர்சென்டேஜ் இன்னும் பூர்த்தி செய்யப்படாத நிலையில் இருக்கிறது. ஆகவே, அங்குள்ள அந்த வசதிகளையெல்லாம் அங்குள்ள இளைஞர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 79, திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

79—

திருவையாறு தொகுதியில் மீனவர்களுக்கு வீடுகள்.

*10123—திரு. ப. கலியபெருமாள் :

மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருவையாறு தொகுதியிலுள்ள தோகூர் திருவாலம் பொழில், அந்திலி போன்ற கிராமங்களில் வாழும் மீனவர்களுக்கு நிரந்தரமான குடியிருப்பு மனை வழங்கி, வீடு கட்டித்தர அரசு முன்வருமா ?

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க **யாற்றப்பெற்றது.**